லல்லு பிரசாத் யாதவ் பிறந்த நாள்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூன். 12- ராஷ்டிரிய ஜனதா தளக் கட்சியின் தேசியத் தலைவர் லல்லு பிரசாத் யாதவ் அவர்களின் பிறந்தநாளையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி உள்ளார்.

அதில்,"**மதச்சார்பின்மைக்கும் சமூக நீதிக்கும் தாங்கள் தொடர்ந்து பாடுபட்டு வருவது, நாடு முழுவதுமுள்ள ஜனநாயக மற்றும் முற்போக்குச் சக்திகளுக்கு உந்துதலாக உள்ளது. நீங்கள் நல்ல உடல் நலத்தோடும் மகிழ்ச்சியோடும் திகழ வாழ்த்துகிறேன்**" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் விஜய் அறிவித்த

விவசாயிகள் கடன் தள்ளுபடி வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவதாக உள்ளது!

முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!

சிவகங்கை, ஜூன் 12 -

சிவகங்கை மாவட்டம் பாகனேரி அருகே உள்ள நகரம்பட்டியில் சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் பிறந்தநாள் விழாவில் அவரது திருவு ருவச் சிலைக்கு முன்னாள் அமைச்சர் - சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

சிவகங்கை சீமையை ஆட்சி புரிந்த மாமன்னர் மருது சகோதரர்கள் நாட்டின் சுதந்திர போராட்டத்திற்காக பாடுபட்டார்கள். அவர்களை ஆங்கிலேயர்கள் சிறை பிடித்து திருப்பத்தூரில் தூக்கிலிடப்படுவதாக அறிவித்தார்கள். அவர்களை காப்பாற்றுவதற்காக பாகனேரி அருகே உள்ள நகரம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த வாளுக்கு வேலி அம்பலம் அவரது ஆட்களுடன் சென்று மருதுபாண்டியர்களை காப்பாற்ற சென்ற பொழுது கத்தப்பட்டு என்ற ஊரின் அருகே ஆங்கிலேயர்களால் சிறை பிடிக்கப்பட்டு வீர மரணம் அடைந்தார். அத்தகைய வீர மரணம் அடைந்து நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய வாளுக்கு வேலி அம்பலம் மரணமடையாதிருந்தால் மாமன்னர் மருது பாண்டியர்கள் காப்பாற்றப்பட்டிருப்பார்கள் என்று கூறப்படுகிறது.

அவரது நினைவினை போற்றும் வகையில் எதிர்கால சந்ததியினர் சுதந்திர போராட்டத்திற்காக பாடுபட்டவர்களை தெரிந்து கொள்ளும் வகையில் நகரம் பட்டியில் வாளுக்கு வேலி அம்பலம் சிலை அமைக்க வேண்டும் என்று அப்குதி மக்கள் முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் கோரிக்கை விடுத்தார்கள்.

அவர்களின் கோரிக்கையை கடந்த 10 ஆண்டுகளாக அ.தி.மு.க ஆட்சியில் ஏற்கவில்லை. இதுகுறித்து நான் சட்ட மன்றத்தில் பலமுறை பேசியும் எவ்வித முன்னேற்றம் ஏற்படவில்லை அப்போதைய அ.தி.மு.க. ஆமைச்சர் பாஸ்கரன் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. கழகத் தலைவர் - முன்னாள் முதல்வர் தளபதி தலைமையிலான ஆட்சி அமைந்ததும் நகரம்பட்டி கிராம மக்களின் கோரிக்கையான வாளுக்கு வேலி அம்பலம் வரலாற்றினை எடுத்துக் கூறினேன்.

சிறுகதை மன்னர் எஸ். எஸ். தென்னரசு அவர்கள் எழுதிய செம்மாதுளை என்ற நூலில் அடிப்படையில் தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய தென்பாண்டி சிங்கத்தில் வாளுக்கு வேலி அம்பலம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதையும் கழகத் தலைவரிடம் கூறினேன்.

அதன் பேரில் நகரம் பட்டியில் அரசின் சார்பில் ரூபாய் 50 லட்சம் செலவில் சிலை அமைக்கப்படும் என்று கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். இதற்கான ஏற்பாடுகளையும் அப்போதைய அமைச்சர் வெள்ளகோவில் சாமிநாதன் தீவிர முயற்சி எடுத்ததன் பேரில் ரூபாய் 50 லட்சத்தில் வாளுக்கு வேலி அம்பலம் சிலை அழகாக அமைக்கப்பட்டு அப்போதைய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் ஆண்டுதோறும். ஜூன் 10ஆம் தேதி வாளுக்கு வேலி அம்பலம் பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள்.

அதன்படி நேற்று முன்தினம் நகரம்பட்டியில் வாளுக்கு வேலி அம்பலம் திருவுருவச் சிலைக்கு என் தலைமையில் மாவட்ட கழக நிர்வாகிகள் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம். இத்தகைய வீர வரலாற்று போராட்ட வீரர்களை நாம் அனைவரும் எதிர்கால சந்ததியினர் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். தமிழ் இனத்திற்காக, தமிழ் மொழிக்காக,தமிழ் வளர்ச்சிக்காக உயிர் நீத்தவர்கள், நாட்டின் சுதந்திர த்திற்காக போராடி தன்னுயிர் நீத்த போராட்ட வீரர்களை கழக அரசு என்றுமே மதித்து அவர்களை கௌரவப்படுத்தி இருக்கிறது.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில், கழக தலைவர் தளபதி அவர்களும் இத்தகைய தொடர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஏராளமான சுதந்திர போராட்ட வீரர்கள், தமிழ் மொழிக்காக உயிர் நீத்தவர்கள் பெருமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். தற்போதைய முதல்வர் விஜய் அவர்கள் தனது தேர்தல் வாக்குறுதியாக விவசாயிகளுக்கான கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தார். ஆனால் அவர்களது தற்போதைய அறிவிப்பு ரூபாய் ஒரு லட்சம் கடன் வாங்கிகளுக்கு ஐந்தாயிரம் கடன் தள்ளுபடி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது விவசாயிகளை ஏமாற்றும் செயலாகும். இந்த அறிவிப்பு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்ற உள்ளது. ரூபாய் 95 ஆயிரம் கடன் கட்டுபவர்கள் ஐந்தாயிரம் கட்டுவது பெரிதல்ல. இது அவர்களை ஏமாற்றும் செயலாகும்.

கழகத் தலைவர் தளபதி ஆட்சியில்ரூபாய் 12 ஆயிரத்து 800 கோடி விவசாய கடன் தள்ளுபடி,ரூபாய் ஐந்து பவன் நகைக்கடன் தள்ளுபடி ,சுய மகளிர் குழு கடன் ரூபாய் 10,500 கடன் ஆக மொத்தம் 20 ஆயிரம் கோடிக்கு மேல் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. நிதிநிலை பிரச்சினை இருந்தாலும் விவசாயி களுக்கான தேர்தல் அறிவித்த வாக்குறுதியை முதல்வர் விஜய் நிறைவேற்ற வேண்டும். ஆனால் அவர் நிறைவேற்றவாரா என்பது விவசாயிகளிடையே சந்தேகம் உள்ளது.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறினார்.

பேட்டியின் போது முன்னாள் அமைச்சர் திருமதி தமிழரசிரவிக்குமார், மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் எஸ் எஸ்.ஏ.வல்லபாய், ஒன்றிய செயலாளர் ஆர்.எம்.கென்னடி மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தார்கள்.

த.வெ.க. அரசின் நிர்வாகத் திறமையின்மையால்

தினசரி மின்வெட்டால் இருளில் தவிக்கும் மக்கள்!

அமைச்சரின் மழுப்பல் பேச்சு!

சென்னை, ஜூன் 12 -

தமிழகம் முழுவதும் தினசரி மின்வெட்டு பிரச்சினை தலைவிரித்தாடும் நிலையில், த.வெ.க. அரசின் நிர்வாக திறமையின்மையால் அவதியுறுகிறோம் என பொது மக்கள் குற்றச்சாட்டை முன் வைத்து வருகின்றனர்.

தமிழக வெற்றி கழகத்தின் தேர்தல் பிரசார பாடலில் 'நான் தன்னந்தனி ஆளு, நீ ஏளனமா பாரு, கொஞ்சம் நவுந்தேன்னா இங்க எட்டு கோடி பேரு,' என பாடல் தொடங்கும். தற்போது த.வெ.க. விற்கு வாக்களித்து ஆட்சியில் அமரவைத்த பின்னர் ஏன் வாக்களித்தோம் என தினசரி அந்த எட்டு கோடி பேரும் கேட்கும் அளவிற்கு மாநிலத்தில் ஏற்படும் மின்வெட்டு, பெண்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்களே சான்று.

அமைச்சரின் மழுப்பலான பதில்!

விஜய் தலைமையிலான அரசு ஆட்சி பொறுப்பேற்ற மிக குறுகிய காலத்திலேயே, ஒட்டுமொத்த மாநிலமும் கடுமையான அறிவிக்கப்படாத மின்வெட்டு பிரச்சினையில் சிக்கித் தவித்து வருகிறது. தேர்தலின்பது, 'மாற்றம் தருவோம்,' என முழங்கி விட்டு, தற்போது நிலவும் மின் நெருக்கடிக்கு தீர்வு காணாமல், மின்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார் தொடர்ந்து மழுப்பலான காரணங்களையும் கட்டுக்கதைகளையும் கூறி வருவது பொதுமக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதே நேரத்தில், இந்த மின்வெட்டுகளுக்கு பின்னால் பல்வேறு நிர்வாக சீர்கேடுகளும், திட்டமிட்ட சதிகளும் இருப்பதாக அவர் கூறிவருகிறார். பொதுமக்களுக்கு தடையற்ற மின்சாரம் வழங்க வேண்டியது தற்போதைய த.வெ.க. அரசின் முதன்மை கடமை. ஆனால், மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் மின்வெட்டு ஏற்படும் போதெல்லாம், முந்தைய திமுக ஆட்சியின் முறைகேடுகளை யும், மின்வாரியத்தின் கடன் சுமைகளையும் மட்டுமே திரும்ப திரும்ப பேசி வருகிறார்.

புதிய அரசு பொறுப்பேற்று ஒரு மாத காலம் ஆகிறது.

ஆனால் தொடரும் மின்வெட்டு பிரச்சினையை சரி செய்ய முடியாமல் திணறி வரும் மின்சாரத்துறை அமைச்சர் இன்னும் பழைய ஆட்சியை குறை கூறிக் கொண்டிருப்பது தவெக அரசின் மீதான நிர்வாகத் திறமையின்மையையே காட்டுவதாக பொதுமக்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மேலும், 'ரீல்ஸ்' காட்டி ஆட்சிக்கு வந்துவிட்டு, ரியல் நிர்வாகத்தில் இந்த அரசு தோற்று விட்டதா என்ற பலத்த விமர்சனம் எழுந்துள்ளது.

அண்மையில் தொடரும் மின்வெட்டு பிரச்னையை சமாளிக்க தெரியாமல் மக்களை திசைத்திருப்ப தமிழக மின்வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் மின்வாரிய தரவுகளை கொண்ட ஹார்ட் டிஸ்க்குகள் திருடப் பட்ட தாக கூறப்பட்டது.

அதன் பின்னர் அதில் எந்த ஆதாரபூர்வமான தடயங்களும் இல்லை என தேய்ந்து போனது ஒருபுறமிருக்க, டெண்டர் முறைகேடுகளை காரணம் காட்டி புதிய திட்டங்கள் முடக்கப்பட்டு வருகின்றன.

முந்தைய சோலார் டெண்டர்களில் குளறுபடி கள் இருந்தால் அதற்கு காரணமானவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, மொத்த திட்டங்களையும் முடக்கி வைப்பது எந்த வகையில் நியாயம் என கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

அரசே திட்டமிட்டு மின்தட்டுப்பாட்டை உருவாக்குகிறது!

இந்த விவகாரம் மூலமாக உள்கட்டமைப்பை மேம்படுத்த புதிய டெண்டர்களை உடனே கோராமல் காலம் கடத்துவது, இந்த மின் தட்டுப்பாட்டை அரசே திட்டமிட்டு உருவாக்குவது போல உள்ளதாக சமூக ஆர்வலர்கள் கருத்துகளை தெரிவிக்கின்றனர். அதேபோல், மின்மாற்றிகள் பழுதடைந்துள்ளன, மின்சுமை அதிகமாக உள்ளது எனத் தொழில் நுட்பக் காரணங்களை அமைச்சர் அடுக்கினாலும், அதைத் தடுக்க அரசு என்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தது என்ற கேள்வி எழுகிறது.

கோடைகாலம் மற்றும் மின் தேவையின் உச்ச வரம்பை முன்கூட்டியே கணிக்கத் தவறியது ஏன்?. மின்வாரியத்தில் 70,000 பணியாளர்கள் பற்றாக்குறை இருப்பதாகக் கூறும் அமைச்சர், போர்க்கால அடிப்படையில் புதிய ஆட்களை நியமித்துத் தடையற்ற மின்சாரத்தை உறுதி செய்யாமல், வெறும் புள்ளிவிவரங்களை மட்டும் ஊடகங்களில் பேசுவது ஏன் என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அரசின் பொறுப்பற்ற செயல்!

நீடிக்கும் தொடர் மின்வெட்டின் அவநிலையின் ஒரு பகுதியாக நேற்றைய தினம் கூட மாங்காடு, பூந்தமல்லி, ஆவடி, போரூர் போன்ற இடங்களில் மின்வெட்டு பிரச்சினை இருந்தது.

இதுகுறித்து அமைச்சரிடம் கேள்விகளை முன்வைத்தால் ஆவடி போன்ற சில பகுதிகளில் நள்ளிரவில் மர்ம நபர்கள் மின் கம்பங்கள் மற்றும் மின்பெட்டிகளில் உள்ள 'பியூஸ் கேரியர்களை' பிடுங்கிச் சென்று செயற்கையான மின்வெட்டை உருவாக்குவது சிசிடிவி காட்சிகளில் பதிவாகியுள்ளது.

அரசை அவமானப்படுத்தவும், மக்களைப் போராட்டத்திற்கு தூண்டவும் இத்தகைய சதி வேலைகள் நடக்கின்றன என்று கூறி சிலர் கைதும் செய்யப்பட்டுள்ளனர் என கூறுகிறார்.

ஆனால், எங்கோ ஒரு இடத்தில் நடக்கும் பியூஸ் திருட்டுகளை காரணம் காட்டி, தமிழகம் முழுவதும் நிலவும் ஒட்டுமொத்த மின் வெட்டுப் பிரச்சினைக் கும் 'சதி' என்று முத்திரை குத்துவது பொறுப்பற்ற தனமானது.

அத்தகைய நபர்களைக் கட்டுப்படுத்துவதும் அரசின் கடமையே ஆகும். தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மின் வெட்டு பிரச்சினைக்குக் கடந்த கால பிரச்சினைகளையே பேசிக்கொண்டு இல்லாமல், அதனைச் சரி செய்ய வேண்டிய முழு பொறுப்பும் தற்போதைய த.வெ.க. அரசுக்கே உரியதாகும். எனவே, போர்க்கால அடிப்படையில் புதிய மின் மாற்றிகளை அமைப்பதும், நிர்வாகத் திறனை மேம்படுத்துவதும் மட்டுமே தற்போதைய இருள் சூழ்ந்த நிலைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்துமில்லை.

மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! வே.வாசு. தலைமை!

வில்லிவாக்கம் கிழக்கு பகுதியில் கலைஞர் புத்தெழுச்சி நாள்!

மாவட்ட கழக செயலாளர் தா.மோ. அன்பரசன் நலஉதவிகள் வழங்குகிறார்!

சென்னை,ஜூன்.12-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் வில்லிவாக்கம் கிழக்கு பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்த நாள்- புத்தெழுச்சி நாள் விழாவை முன்னிட்டு "புத்தெழுச்சி-14 கடமையால் அனைவரையும் உயர்த்துவோம்! நலம் வாழ பொருள் தந்து உதவுவோம்!!எனும் தலைப்பில், மாபெரும் நலத்திட்ட உதவிகளை 13/06/2026, சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில், சென்னை, அயன்புரம் பெரியார் நகர் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பில் நடைபெறுகிறது.

இந் நலத்திட்ட விழாவில் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர் வே.வாசு தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழகச்செயலாளர் பி.கே.சேகர்பாபு எம் எல் ஏ, அ.வெற்றி அழகன்,ப. ரங்கநாதன் கார்த்திக் மோகன், கூ.பீ. ஜெயின், டி.வி.செம்மொழி,சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன், ,வானவில் விஜய், லதா வாசு.எம் சி, ஆர். வரதன் ,ஜி.ஜே. பிரபு ,எம். சுரேஷ். ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜெரால்ட் ராஜதேவன், புரசை டி சம்பத் , டி. தாமோதரன், டபிள்யு. அமுல், நா. அறிவுடை நம்பி,எ.வேதா, ச.மனோகரன், டி ஸ்டாலின், தேவராஜ் ஜிம் வி சரவணன், கே பாஸ்கர் வி சபாபதி, வ ரமேஷ் பாபு ,மு. பரமானந்தம், ந. குமார், எ.சத்திய நாராயணன், கி ஜெய் சங்கர், எஸ். துரை பாபு,கே. ராஜா,

வி ஆர் ஜெயக்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நலத்திட்ட விழாவில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பில் வசிக்கும் 500 குடியிருப்பு வாசிகளுக்கு நலத்திட்ட உதவிகளை காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் திரு. தா.மோ. அன்பரசன் வழங்கி சிறப்பிக்கின்றார்.

மேலும் இப்பொதுக் கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்பி, ஜோசப் சாமுவேல்,கே எஸ் ரவிச்சந்திரன் தமிழன் பிரசன்னா, டாக்டர் ஏ.பி. பூர்ணிமா எம்.சி, ஒ.எ. நாகலிங்கம் . பி கே மூர்த்தி, கே சந்துரு , சி.மகேஷ் குமார், சங்கரி நாராயணன், எஸ் மணி முடி, கே எஸ் எம் நாதன்,எம் விஜயகுமார் என் பி எம் ஷேக் அப்துல்லா, பரிதி இளம் சுருதி எம்சி, கவிஞர் நன்மாறன் மாவட்ட கழக நிர்வாகிகள்: தேவ ஜவகர்,ஜி.மகாதேவன், புனித வதிஎத்திராசன் MC,இசட். ஆசாத், மண்டல குழு தலைவர்கள்: பி. ஸ்ரீராமுலு, MC,சரிதா மகேஷ் குமார்,, பகுதி கழக செயலாளர்கள்: ஐசிஎப் வ.முரளிதரன்,எ.நாகராசன்,வே.வாசு , எஸ். இராஜசேகர் எஸ்.முரளி. டிஎஸ்பி ராஜகோபால், எம் டி ஆர் நாகராஜ், செ. தமிழ்வேந்தன் எம்.சாமி கண்ணு, சொ. வேலு. எம். சி,வி.சுதாகர் பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ. மணி, எஸ். பன்னீர் செல்வம், கோ.மணி,அ. நிர்மலாதேவி மற்றும் கழக முன்னோடிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் விக்னேஷ் சீனிவாசன் நன்றி கூறுகிறார்.

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி

பகுதி அமைப்பாளர்கள் - பகுதி துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பா.அருண்குமார் அறிக்கை!

சென்னை,ஜூன்.12-

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பா.அருண்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி பகுதி அமைப்பாளர்கள் - பகுதி துணை அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 13-06-2026 சனிக் கிழமை மாலை 05.00 மணியளவில், சைதாப்பேட்டை பஜார் சாலையில் அமைந்துள்ள "சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில்" சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்ரமணியன் தலைமையில், மாநில மாணவர் அணி துணை செயலாளர் சென்னை மண்டல பொறுப்பாளர் தமிழ் க. அமுதரசன் முன்னிலையில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆ.ஈஸ்வரமூர்த்தி, ஜெ.சீனிவாசன்,எஸ்.கே.தமிழ்வேல் கவி,எஸ்.விஷ்ணு T.S.P. தமிழ்செல்வன், எஸ்.யமுனாஸ்ரீ ஆகியோர் பங்கேற்றிட நடைபெறும்.

அதுபோது சென்னை தெற்கு மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் - பகுதி துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1 . P.M. ஸ்ரீ திட்டம் மற்றும் மும்மொழி திணிப்புக்கு எதிராக பா.ஜ.க. அரசை கண்டித்து ஆளுநர் மாளிகை முன்பு ஆர்ப்பாட்டம் சமந்தமாக.

2. முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு "தமிழ் நாட்டின் நவீன சிற்பி" என்ற தலைப்பில் கருத்தரங்கு கூட்டம் தொடர்பாக

3. மாணவர் அணி ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பா.அருண்குமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவொற்றியூர் மேற்கு பகுதி 4 வது வட்டம் சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்!

வை.ம.அருள்தாசன் தலைமை ! ந. ராம்குமார் முன்னிலை !

சென்னை,ஜூன்.12-

ஜூன் -3 முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்கு பகுதி 4 வது வட்டத்தில் கழக இரு வண்ணக் கொடியேற்றி திருவுருவப்படத் திற்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

திருவொற்றியூர் மேற்கு பகுதி 4 வது வட்ட திமுக சார்பில் எர்ணாவூர் பேருந்து நிலையம் அருகில் 3-6-26 காலை 10:00 மணியளவில் வட்ட கழக பொறுப்பாளர் ந. ராம்குமார் அவர்கள் முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை. ம. அருள்தாசன் பங்கேற்று முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நற்பணி மன்றத்தில் கழக நிறுவன கொடியேற்றி முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் புகழ் ஓங்குக என்று முழக்கமிட்டு அய்யா கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி இனிப்புகள் வழங்கினார்.

இதில் பகுதி கழக நிர்வாகிகள் எம்.வஜ்ரவேல், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் தழவை எஸ்.ரஞ்சித் வட்டக் கழக நிர்வாகிகள் அ.இமானுவேல், க. சோழன் பி. எம். ஹரி, ஜி. பூங்கொடி, க.கண்ணன், எஸ். ராஜேஷ்,மு. பாபு, ஜி கணேஷ், எஸ். தினேஷ், ஜெ.மாரிமுத்து, ஆர் பாலாஜி, எஸ். வினோத், ரமேஷ் ரோனி, சோமசுந்தரம்,சர்க்கரை, தில்லை செல்வராஜ், ராமலிங்கம், லட்சுமி மேனன், சிவசங்கர், பொன்னம்பலம், பரந்தாமன், உதயகுமார் ஜெ.விக்னேஷ், லோகு, அப்பு,சுரேஷ், சதீஷ்குமார், ஜி. தினேஷ், அன்பரசன், கணேசன், மணி மேகலை, பாபு, பாட்ஷா, செந்தில் மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள், கிராம நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.

சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட

துறைமுகம் சட்டமன்றத் தொகுதி பகுதிக் கழகச் செயலாளர்கள் - நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட துறைமுகம் சட்டமன்றத் தொகுதிப் பகுதிக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (12.06.2026 - வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணியளவில், சென்னை, ஓட்டேரி எண்.7, செல்லப்பா தெருவில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதிப் பார்வையாளர், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :- கழக ஆக்கப் பணிகள்.

பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ.,
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.